8/4
4/7/70

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1071 1970 ஜூலை 2 வியாழக்கிழமை ★★★ விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 1991-7-8 Periodical Division Library

# வாடகை வீட்டுவாசிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு

## அமைச்சர் நியமித்த கமிட்டி நடவடிக்கை

**வாடகை வீடுகளில் வசிப்பவர்களின் பிரச்சினைகள் விரைவில் ஒழிய உள்ளன. வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமனல் நியமிக்கப்பட்ட வாடகைக் கட்டுப்பாட்டுக் கமிட்டி இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.**

வீட்டுச் சொந்தக்காரர்கள், குடியிருப்பாளர்கள் ஆகியோர்களிடமிருந்து, அவர்கள் வசிக்கும் வீடுகள், மாடிகள், அறைகள், இணைப்புக்கள் பற்றிய தகவல்களை கமிட்டி கோரியுள்ளது.

* எவ்வளவு வாடகை கொடுபடுகிறது. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்துள் அடங்கியதா?

* வீட்டு இலக்கம், வீதி, இருக்கும் இடம்.

* முற்பணம் அல்லது நிந்தம் கொடுபட்டுள்ளதா? எவ்வளவு?

* வீட்டுச் சொந்தக்காரரின் பெயர், விலாசம்.

* குடியிருப்பாளர் பெயர், விலாசம்,

* 1941-ல் உள்ள வரி விதிப்பு – அதற்குப் பின் கட்டிய வீடானால் பழைய, புதிய வரி மதிப்பு எவ்வளவு?

* தளபாடங்களுடன் உள்ளதா?

* தண்ணீர், மின்சாரம் மற்றும் வசதிகள் உண்டா?

இம்மாதம் 10-ந் திகதிக்கு முன் இந்த விபரங்களை அனுப்புமாறு கமிட்டி கேட்டுள்ளது.

இவ்விபரங்கள் யாவும் பரம இரகசியமாக வைக்கப்படும்.

விபரங்கள் யாவும் "காரியதரிசி, வாடகைக் கட்டுப்பாட்டுக் கமிட்டி, 123, விஜேராம மாவத்தை, கொழும்பு-7" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

### மீனாட்சி



என்னாங்க, மினிஸ்கேட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வருகுதாமே!

ஆமாங்க, அப்படியென்றால் துடையைக் காட்டுகிற தொழில் இனி இல்லையாக்கும்!



இலங்கையின் பிரபல சினிமா அதிபர் திரு. டபிள்யு. எம். எஸ். தம்புவின் "வெண் சங்கு" தமிழ்த் திரைப் படத்தில் குமாரி ராஜாமணியின் அழகிய தோற்றம். (ம)

## நன்றிதெரிவிக்கும்பிரேரணை மூதவையில்நிறைவேறியது

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மூதவையில் நேற்று ஆதரவாக 13 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் பெற்று நிறைவேறியது.

தமிழரசுக் கட்சியால் கொண்டு வரப்பட்ட மூன்று திருத்தப் பிரேரணைகளும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டன.

மூன்று திருத்தப் பிரேரணைகளும் 13—3 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட திருத்தப் பிரேரணையை ஆதரித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த செனட்டர் ஆர். ஜேசுதாசனும் வாக்களித்தார்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் திருச்செல்வம், செனட்டர் எஸ். நடராஜா ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தமிழ் செனட்டரான திரு. ரி. நீதிராஜா, திரு. எஸ். நடேசன் ஆகியோர் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை.

தபால், தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும் திருத்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார். (5)

## 6 பேர் ஆஜர் செய்யப்பட்டனர்

வெள்ளவத்தை றொக்சி தியேட்டருக்கு அருகில் வைத்து பஸ் கண்டெக்டர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு தெற்கு நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆறுபேர் ஆஜர் செய்யப்பட்டனர்.

கே. ரத்னதாசா, எல். லயனல், நடராஜா, அமரசேனா, பி. எல். சிறிசேனா, பி. எச். பெர்னாண்டோ ஆகியோர் இந்த வழக்கில் சந்தேக நபர்கள் ஆவர். (5)

## ரத்தினசாரிதேவியின்விஸா பறிமுதல் செய்யப்பட்டது

ஜகார்த்தா, ஜூலை 1

தற்பொழுது இந்தோனேஷியாவில் தங்கியிருக்கும் காலஞ்சென்ற சுகர்னோவின் ஜப்பானிய மனைவியான ரத்னசாரிதேவியின் விஸா பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக ராணுவ வட்டாரங்கள் இன்று தெரிவித்தன.

நோய்வாய்ப்பட்டிருந்த தனது கணவரைப் பார்ப்பதற்காக கடந்த 20-ம் திகதி தேவி ஜகார்த்தா வந்திருந்தார். அவருடன் அவரின் மகளும் வந்திருந்தார்.

யுத்த சிர்திருத்த நிதி மோசடி விஷயமாக ரத்னசாரிதேவி மீது விசாரணை நடத்தப்பட இருப்பதே விஸா பறிமுதல் செய்யப்பட்டதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தோனேஷிய அட்டோர்னி ஜெனரல் இந்த விசாரணையை மேற்கொள்வார் என்று ராணுவப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (5)

## பிரேமசிறிக்கு புதிய பதவி

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. பிரேமசிறி பெரேரா பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உதவிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் அரசாங்கத்தின் உணவு, விவசாய அமைச்சின் உதவிக் காரியதரிசியாகக் கடமை ஆற்றி இருந்தார். (5)

## 'பீக்ஸ்' திட்டத்தில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படும்?

பொருட்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு பீக்ஸ் கட்டண விகிதங்களை மாற்றி அமைக்க நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா உத்தேசித்துள்ளார்.

உத்தேச திட்டத்தின்படி கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்கள் முக்கிய உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யும்போது "பீக்ஸ்" திட்டத்தில் இருந்து விதி விலக்கு அளிக்கப்படும்.

நிதி அமைச்சரின் இந்தத் திட்டத்தை மந்திரிசபை தற்பொழுது பரிசீலனை செய்து வருகிறது.

நிதி அமைச்சரின் உத்தேச திட்டம் அமுல் செய்யப்பட்டால் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குப் பெரிதும் உதவும் என்று பொருளியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

தேசிய அரசாங்கத்தின் பதவி காலத்தில் "பீக்ஸ்" முறை முதன் முதலாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது தெரிந்ததே. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காதலித்தே கடிமணம் புரிந்தனர், ஆனாலும்–

# மாமி–மருமகள் சண்டை பிளவுக்கு காரணமாம்

## கணவனிடம் ஜீவனாம்சம் கோருகிறாள் நங்கை

"இவர்கள் ஒருவரை ஒருவர் மனப்பூர்வமாக காதலித்தே கல்யாணம் செய்து கொண்டனர். ஆனாலும் ஆறு மாத காலத்துக்குள் பிரிந்து விட்டார்கள். மாமியார் – மருமகள் சண்டையே இதற்குக் காரணமாகும்"

மத்துகாம நீதவான் திரு. நிஸ்ஸங்கா வீரரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஜீவனாம்ச வழக்கு ஒன்றில் வாதிதரப்பு வழக்கறிஞர் மேற்கண்டவாறு கூறினர்.

மாவத்தவத்தையைச் சேர்ந்த ஜீ. டி. ஜினசேன குணசேகரா என்பவரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி சிசிலின் லியனகே என்னும் இளம் பெண் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த இளம் ஜோடி இல்வாழ்க்கை நடத்திவந்த காலத்தில் மணமகளின் தாயார் இவர்களின் குடும்ப விவகாரங்களிலெல்லாம் தேவையில்லாமல் தலையிட்டதாகவும், மருமகளைப் பற்றி தண்டவாறு மகனிடம் புகார் கூறி அவர்களைப் பிரித்து வைத்ததாகவும் வழக்கு விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. தனிக் குடித்தனம் நடத்த வரும்படி மனைவி கேட்டபோது அவர் மறுத்துவிட்டாராம்.

மனுதார் தரப்பில் இவ்வாறு கூறப்பட்ட சம்பவங்களை எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் மறுத்தார்.

"மாமிக்காரி மிகவும் நல்லவர். தனது மகனிலும் பார்க்க மருமகளை அவர் உயிராக நேசித்தார். ஆனால் மருமகள் தான் பொல்லாதவள்" என்று எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் வாதாடினார்.

மேல் விசாரணை செப்டம்பர் 27-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

## போத்தல் லாம்பினால் இளம் பெண் மரணம்

மரதம்ப, ஜூலை 1

36 வயது நிரம்பிய இளம் பெண் ஒருத்தி நெருப்புக்குப் பலியான பரிதாப சம்பவம் ஒன்று சிலாபத்தில் உள்ள மெதாவத்த என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

கதாமுத்து யோகமணி என்ற அந்தப் பெண்ணின் மரணம் சம்பந்தமாக ஜனப் கே. ஏ. லத்திப்கான் மரண விசாரணை நடத்தினர்.

காலஞ் சென்ற பெண்ணின் தகப்பனாரான கறுப்பன் கதுமுத்து (65) சாட்சியம் அளிக்கையில் பின்வருமாறு கூறினர்.

"யோகமணி எனது நான்காவது மகள். எனக்கு ஏழு பிள்ளைகள் இருக்கிறார்கள். சம்பவ தினம் நான் வீட்டில் இருந்தேன்.

"அப்பொழுது காலஞ் சென்ற எனது மகள் போத்தல் லாம்பு ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய சட்டையில் அப்பொழுது நெருப்புப் பற்றியது.

"சம்பவம் நடைபெற்ற சமயம் எனது மனைவியான இராமலெட்சுமி செல்லாச்சியும் வீட்டில் இருந்தார். காலஞ் சென்றவரை உடனடியாகச் சிலாபத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தோம். இந்த மரணம் சம்பந்தமாக எவர் மீதும் எமக்குச் சந்தேகம் கிடையாது."

இவ்வாறு சாட்சி கூறினர்.

மற்றும் காலஞ் சென்ற பெண்ணின் தாயாரான செல்லாச்சி, பொலீஸ் கான்ஸ்டபிள் லீனஸ் ஆகியோரும் சாட்சியம் அளித்த பின்னர் விபத்தினல் ஏற்பட்ட மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினர். (5)

## சின்னப்புல்லுமலை கொலை வழக்கு விசாரணை

மட்டக்களப்பு, ஜூலை 1

"காலஞ் சென்ற வேல் முருகு சீனித்தம்பி எதிரியின் மனைவியைக் கற்பழிக்க முயன்றாரா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. பிறருடைய விஷயங்களில் நான் அக்கறை கொள்வதில்லை"

மட்டக்களப்பு உதவி நீதிபதி திரு. கே. நவரத்தினராஜா முன்னிலையில் நடைபெற்ற கொலை வழக்கு ஒன்றில் சாட்சியம் அளிக்கையில் சின்னப்புல்லுமலையைச் சேர்ந்த கண்ணப்பர் தங்கத்துரை என்பவர் மேற்கண்டவாறு சொன்னர்.

இந்த வழக்கில் சின்னப்புல்லுமலையைச் சேர்ந்த சிறிசேன என்று அழைக்கப்படும் எட்வின் சிங்கோ என்பவர் எதிரி.

1970 மே 5-ம் திகதி சின்னப்புல்லுமலையைச் சேர்ந்த வேல் முருகு சீனித்தம்பி என்பவரைக் கொலை செய்ததாக எதிரி மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கண்ணப்பர் தங்கத்துரை சாட்சியம் அளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது— "சின்னப்புல்லுமலையில் தேநீர் கடை ஒன்று நடத்தி வருகிறேன். சம்பவ தினம் காலை 8-00 மணி அளவில் குசினியில் இருந்த சமயம் "அம்மா" என்ற சத்தம் கேட்டது. விருந்தைக்கு ஓடி வந்து பார்த்த சமயம் காலஞ் சென்ற சீனித்தம்பியை சிறிசேன தாக்கிக் கொண்டிருந்தார்.

"எதிரி தடி ஒன்றினல் காலஞ் சென்றவரை அடித்துக் கொண்டிருந்தார். அடிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்ட போது அவர் என்னை நோக்கியும் தடியை ஓங்கினர். நான் பயத்தினல் குசினிக்கு ஓடி விட்டேன். இதன் பின்னர் எதிரியும், காலஞ் சென்றவரும் எனது வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள வயல் பக்கம் ஓடினர்கள்.

குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சமயம் சாட்சி தொடர்ந்து கூறியதாவது— "சின்னப்புல்லுமலையில் கடந்த 15 வருட காலமாக இருக்கிறேன். காலஞ் சென்றவரைக் கடந்த மூன்று வருடங்களாகத் தெரியும். ஆனல் அவர் பிரமச்சாரியா அல்லது திருமணம் ஆனவரா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

"சம்பவம் நடை பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தீவைப்புச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து காலஞ் சென்றவர் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எதிரியின் வீட்டில் தீ ஏற்பட்டது.

"எதிரியின் மனைவியை காலஞ் சென்றவர் கற்பழிக்க முயன்றாரா என்பது பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. பிறருடைய விஷயங்களில் நான் ஒரு போதும் தலையிடுவதில்லை."

இவ்வாறு சாட்சி கூறினர்.

காலஞ் சென்றவரின் சகோதரியான வேல்முருக அழகம்மா சாட்சியம் அளித்தார்.

அவர் கூறியதாவது, "சம்பவ தினமான மே மாதம் 5-ம் திகதி நான் வேலைக்குச் சென்றிருந்தேன். வீட்டில் இருந்து சுமார் கால் மைல் தூரத்தில் நான் வேலை செய்யும் இடம் இருந்தது.

"அன்று காலை 800 மணி அளவில் கண்ணப்பர் தங்கத்துரை என்னை வந்து சந்தித்தார். எனது மூத்த சகோதரனை எதிரி அடித்ததாகச் சான்னர். உடனே நான் வீட்டுக்கு ஓடிச் சென்றேன். அங்கு எதிரியையோ அல்லது காலஞ் சென்றவரையோ காணவில்லை. இதன் பின்னர் நான் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு கொடுத்தேன்" என்றும் சொன்னர்.

குறுக்கு விசாரணையின் போது சாட்சி கூறுகையில், தனது சகோதரர் இதற்கு முன்னரும் சிறை சென்றிருக்கிறார் என்றும் அவர் ஒரு ஐ. ஆர். சி. என்றும் கூறினர்.

இந்தக் கட்டத்தில் மேல் விசாரணை ஜூலை 2-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (5)

## வடபகுதியில் சமசமாஜ கட்சியின் வாலிபர் லீக்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வட பகுதியில் உள்ள திருநெல்வேலியில் லங்கா சமசமாஜக் கட்சியின் வாலிபர் லீக் கிளை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

புலத்சிங்கள நாடாளுமன்ற அங்கத்தவர் திரு. மங்கள முனசிங்கா, திரு. வி. சச்சிதானந்தம் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் ஆவர்.

திரு. சச்சிதானந்தம் தனது தலைமை உரையில், "தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுத்தப்படுவது அவசியம் என்றும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவருக்கு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அமைச்சர் பதவி வழங்கியது மூலம் தமிழர்களைக் கௌரவித்துள்ளார்."

திரு. மங்கள முனசிங்கா பேசுகையில் கூறியதாவது? "இன்றைய போராட்டம் நடைபெறுவது தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் அல்ல. முற்போக்குச் சக்திகளுக்கும் பிற்போக்குச் சக்திகளுக்கும் இடையிலேயே போராட்டம் நடைபெறுகிறது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கைகளை அமுல் நடத்துவதற்காகவே விவசாயிகளும், தொழிலாளிகளும் எமக்கு ஆதரவு தந்தார்கள்.

"வட பகுதியில் லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கைகளைச் கட்டி வளர்த்த தோழர் தர்மகுலசிங்கம் தோழர் சிற்றம்பலம் ஆகியோரை நாம் மறந்து விடக் கூடாது."

இவ்வாறு திரு. மங்கள முனசிங்கா பேசினர். (5)

ராதா

4 – 7 – 70

இதழில்

★ "தென்னகத்தின் சிறந்த நடிகர் சிவாஜி கணேசன், நடிப்பிலும் வசனம் பேசுவதிலும் தனக்கென ஒரு பாணியை வகுத்துள்ளார்" இவ்வாறு கூறுவது யார் தெரியுமா? மக்கள் திலகம் தான். எனவே அவர் கூறுவதைப் படித்துப் பாருங்கள்.

★ முத்தக் கலையின் வித்தகர் வள்ளுவர்.

★ விஜயகுமாரி சினிமாவை விட்டு விலகுவாரா?

மற்றும் வழக்கமான சுவையம்சங்கள் நிறைந்த "ராதா"வை இன்றே வாங்கிப் படியுங்கள்.

## இரகசியப் பேச்சுவார்த்தை

பொன், ஜூலை, 1

மேற்கு ஜெர்மனியிலுள்ள பிரிட்டன், அமெரிக்க, பிரெஞ்சுத் தூதுவர்கள் கிழக்கு ஜெர்மனியில் உள்ள ரஷ்ய தூதுவருடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

## வர்ணப் பருத்தி உற்பத்தி

வர்ணப் பருத்தியை உற்பததி செய்யலாம்!

துருக்மீனிய விவசாய ஆராய்ச்சிக் கல்லூரியில், பச்சை, நீலம், இளஞ் சிவப்பு ஆகிய வர்ணங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. பல ஆண்டு ஆராய்ச்சிக்குப் பின் இங்கே வர்ணம் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில், மிகப் பரந்த பிரதேசங்களில், வர்ணப் பருத்தியைப் பயிரிட முடியும் என்பதைச் சோதனைகள் நிரூபித்துள்ளன.

### சுபீட்சம் பெற வழி

உயரும் வாழ்க்கைச் செலவும், வேலையற்றோர் பிரச்சினையுமே தேசிய அரசாங்கத்தைப் பூண்டோடு படி இறக்கியது. எனவே மக்கள் அரசு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் வழி காணுதல் வேண்டும். நீண்ட காலத்தின் பின் பயன்தரக்கூடிய உற்பத்தித் திட்டங்கள் எதுவும் உடனடியாக நன்மையைத் தரக்கூடியவையன்று. ஆதலின், நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களுடன் உடனடியாகப் பயன்படக்கூடிய உற்பத்தித் திட்டங்களையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். பத்து லட்சம் பேருக்கு மேலாக நாட்டில் வேலையற்றவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களை உடனடியாக அல்லது வல்விரைவில் பயன்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களே நாட்டிற்குச் சுபீட்சத்தைத் தருவனவாகும்.

தந்தி

## பலே ஆசாமியை தேடி பொலீஸ் வேட்டை

# நடிகையின் ஆபரணம் களவு போன மர்மம்!

## திருப்பி அதைத் தந்தால் 5000 டாலர் கிடைக்கும்

சிட்னி, ஜூலை, 1

ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது களவாடப்பட்ட தனது தங்க ஆபரணத்தை திருப்பித் தந்தால் அதற்கு ஈடாக 5,000 டாலர் பணம் தருவதாக அமெரிக்க நடிகை மொரீன் ஓஹாரா அறிவித்துள்ளார்.

நடிகை மொரீன் தங்கி இருந்த ஹோட்டல் அறையில் இருந்து இந்த தங்க ஆபரணத்தை யாரோ அபேஸ் பண்ணிவிட்டார்கள். தான் உயிருக்குயிராக பேணிக் காத்து வந்த இந்த நகையைத் தன்னிடமே ஒப்படைத்து விடும்படி அழகி மொரீன் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"நகையைக் களவெடுத்தவர்கள் கூட அதை நேரடியாக என்னிடம் ஒப்படைக்கலாம். நான் உடனே 5,000 டாலர் தருவேன். இது பற்றி யாருக்கும் கூற மாட்டேன். பொலீஸில் தகவல் தர மாட்டேன்" என்றும் நடிகை மொரீன் உறுதி அளித்துள்ளார்.

"அந்த நகை எனக்கு உயிர் போன்றது. நான் தேவாலயத்துக்குச் சென்று ஆண்டவனைத் துதிக்கும் போதெல்லாம் அந்த நகையையே அணிந்து கொள்வது வழக்கம். அவ்வளவு புனிதமானது அந்த நகை" என்றும் அழகி மொரீன் தெரிவித்துள்ளார்.

நடிகை மொரீன் தங்கியிருந்த ஹோட்டல் அறையின் பூட்டைக் கள்ளச் சாவி கொண்டு திறந்து உள்ளே புகுந்து யாரோ இந்தத் திருட்டைச் செய்துள்ளனர். பொலீஸார் அந்த பலே ஆசாமியைப் பிடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். (ம)

அரபு நாடுகளிடமிருந்து

## யுத்த செலவை ரஷ்யா கேட்கிறது

மாஸ்கோ, ஜூலை, 1

மத்திய கிழக்கில் நடைபெறும் யுத்தத்துக்கான செலவைச் செலுத்தும்படி ரஷ்யா அரபு நாடுகளைக் கேட்டுள்ளதாம்.

இவ்வாறு கூறும் செய்தியொன்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு நிலைமை பற்றி எகிப்திய ஜனதிபதி நாஸர் தற்சமயம் ரஷ்யத் தலைவர்களுடன் மாஸ்கோவில் பேச்சு வார்த்தை நடத்தி வருவது தெரிந்ததே.

அடுத்த வருடம் முதல் யுத்த செலவைச் செலுத்தும்படி ரஷ்யா கோரியுள்ளதாக இந்தச் செய்தி மேலும் கூறுகிறது.

1967-ம் வருட யுத்தத்துக்குப் பின் 100 கோடி ரூபில் பணத்தை ரஷ்யா அரபு நாடுகளுக்காக செலவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்சமயம் மாஸ்கோவில் இருக்கும் ஜனப் நாஸர்; சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் லியோனிஸ்ட் பிரஷ்னேவ், ஜனதிபதி நிக்கலோவ் பொட்கோர்னி, பிரதமர் அலெக்ஸி கொஸிஜின் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

## துர்நடத்தையில் ஈடுபடும் கிராமத்து மாணவிகள்

மட்டக்களப்பு, ஜூலை, 1

கிராமப் புறங்களில் இருந்து மட்டக்களப்புப் பட்டணத்தில் தங்கி கல்வி பயிலும் மாணவிகளைத் துர் நடத்தையில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிப்பதில் ஒரு கூட்டம் மட்டக்களப்புப் பகுதியில் இருப்பதாக சொல்லப்படுகிறது!

மட்டக்களப்பு நகர் பகுதி, கோட்டை முனை, மாமாங்கப் பகுதி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் மட்டக்களப்பு நகரில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் கிராமப் புறங்களிலுள்ள மாணவிகள் தங்கி இருப்பதாகவும், இப்படி கிராமப்புற மாணவிகளை வீடுகளில் வைத்திருப்பவர்கள், அவர்களை துர்நடத்தையில் ஈடுபடுத்துவதாகவும், ஈடுபட உற்சாகமளிப்பதாகவும் தெரிய வருகிறது.

இப்படி கிராமப் புறங்களில் இருந்து வந்து மாமாங்கப் பகுதியில் தங்கி கல்வி பெற்ற இரு மாணவிகள் கர்ப்பவதிகளாகி வீடு திரும்பிய சம்பவம் நடைபெற்றுள்ளதாம்.

சுகாதாரப் பகுதியினர் மட்டக்களப்பு பிரதேசத்தில் நடத்திய ஒரு சுகாதாரப் பரிசோதனையில் பெருந் தொகையான பருவ மாணவிகள் மத்தியில் மேக நோய் பீடித்துள்ளதை கண்டு பிடித்துள்ளதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இவற்றில் குறிப்பிடக்கூடியளவு மாணவிகள் கிராமப் புறத்தில் உள்ளவர்கள் என்பதும் அந்த புள்ளி விபரத்தின் மூலம் தெரிய வருகிறது. இந்த விபரத்தைக் கவனிக்கும் போது அப்பாவி கிராம மாணவிகளை நகரத்து நாகரிகத்தைக் காண்பித்து அவர்களை துர்நடத்தையில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கும் கும்பல்களை கண்டு பிடிப்பதில் தற்போது பொலீஸாரும் மோப்பம் பிடித்துக் கொண்டு வருகிறார்கள்.

இப்படியான கூட்டத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தை சில மாதங்களுக்கு முன்பு இப்பகுதியில் இருந்து கூலைத்து விட்டார்கள். இந்த குடும்பம் பெரிய புள்ளிகளுக்கு இந்த சாதுரியமான வேலையை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. (ம-23)

## ஆத்திரமுற்ற அந்த மனிதன் நாயை திருப்பி கடித்தான்

ஒரு அல்சேஷன் நாய் மனிதனைக் கடித்தது. ஆத்திரமுற்ற அந்த மனிதன் நாயைத் திருப்பிக் கடித்தான்.

ஹோட்டல் ஒன்றுக்குள் நடைபெற்ற இச்சம்பவம் கோர்ட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

"என்னையும் இரண்டு நண்பர்களையும் ஹோட்டலுக்குள் போக விடாது நாய் தடுத்தது. ஆத்திரமுற்ற நான் அதன் காதைக் கடித்தேன். மெதுவாகத்தான் கடித்தேன்" எனக் கூறினர் வில்லியம்ஸ்.

அமைதிக்குப் பங்கம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் பத்து ஸ்டேர்லிங் அபராதமும் ஒரு வருட நன்னடத்தைப் பிணையிலும் வில்லியம்ஸ் விடப்பட்டார். (ம-15)

## ஒத்திவைப்பு

வாஷிங்டன், ஜூலை. 1

"அப்பலோ - 14" விண்வெளிக் கலத்தின் சந்திரப் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.


எதிர்வரும் ஜனவரி 31-ம் திகதிவரையும் இப் பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விண்வெளிக் களஞ்சியம்

"விண்வெளி இயல்" என்ற பெயரில் ஒரு தகவல் களஞ்சியத்தின் புதிய பதிப்பு இங்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்திய பதிப்பு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

"சோவியத் யூனியன் மற்றும் அயல் நாடுகளின் முக்கிய விண்வெளிச் சாதனைகளும், மேலும் சில திட்டவட்டமான விளக்கங்களும், மற்றும் விண்வெளித் தகவல் போக்கு வரத்தும், மருத்துவமும் உயிரியலும். இந்தத் தகவல் களஞ்சியத்தில் விளக்கப்பட்டுள்ளன. பூ பௌதிகம், வானஇயல், விண்வெளி நியதிகள் பற்றிய கட்டுரைகளும் இதில் உள்ளன" என்று "பிராவ்தா" எழுதுகிறது.

## குறும்புக்காரச் சுப்பி



## 258 மாணவர் கைதாயினர்


புவனஸ் அயர்ஸ், ஜூலை !

மாணவர் தலைவரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக, புவனஸ் அயர்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மறியல் செய்ததற்காக 258 மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 83 பெண்களுமுளர்.

ஆசிரியர்களைத் தடுத்து நிறுத்தியதற்காகவும் ஒழுங்கீனமாக நடந்ததற்காகவும் இவர்கள் மீது பொலீசார் வழக்குத் தொடர்வர். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவர்களை அரவணைக்கக் கரும்புக் கரம் நாசவேலைக்காரரைத் தடுக்க இரும்புக் கரம்



# நாடாளுவோருக்கு மிக மிகத் தேவையே

"நல்லவர்களை அரவணைக்க கரும்புக் கரமும் நாசவேலைகளைத் தடுக்க இரும்புக் கரமும் நாடாளுவோருக்கு மிகமிகத் தேவை" என்று புத்தாண்டு பரிசுச் சீட்டுப் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கலைஞர் [illegible]ர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:—

"நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது முதலமைச்சர் தம்முடைய திருக் கரத்தால் பரிசுகளை வழங்குவார் என்று குறிப்பிட்டார்.

எனது கரம் திருக்கரம் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் அன்பின் அடிப்படையில் நிதியமைச்சர் எனது கரத்தைத் திருக்கரம் என்று குறிப்பிட்டதை ஒரே ஒரு காரணத்துக்காக ஒத்துக் கொள்கிறேன்.

என்னுடைய அண்ணன் அணிவித்த கணையாழி இந்த விரலில் மின்னுகின்ற காரணத்தினால் இதைத் திருக்கரம் என்று மதியழகன் அவர்கள் சொன்னார் போலும்!

நாடாள்பவரின் கரங்கள் நல்லவர்களை அரவணைக்கும் கரும்புக் கரமாகவும், நாசவேலைகளைத் தடுத்து நிறுத்தும் இரும்புக் கரமாகவும் இருந்திட வேண்டும்.

இந்தக் கருத்தை வைத்துத்தான் "நாச வேலைகளில் — சதி வேலைகளில் ஈடுபடுவோரை இரும்புக்கரம் கொண்டு தடுப்போம்" என ஒருமுறை நான் குறிப்பிட்டேன். அதில் இரும்புக் கரம் என்ற வார்த்தையை மாத்திரம் எடுத்து வைத்துக் கொண்டு முன்னும் பின்னும் சொன்னவைகளை மறைத்து விட்டு சில பேர் கேலி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நக்சல்பாரி பாணி வேலைகளையும் நாச சக்திகளின் தீய நடவடிக்கைகளையும், மலர்க்கரம் கொண்டு அணைத்து யாரும் மகிழ்ச்சி தெரிவிக்க மாட்டார்கள்.

இந்திரா காங்கிரஸார் நடத்திய ஒரு மாநாட்டில் கூட நாச வேலைகள் — சதி வேலைகளை மத்திய அரசில் இருக்கின்ற ஆட்சி, தன்னுடைய இரும்புக் கரத்தால் அடக்கும் என்கிற வல்லமை பொருந்திய வாக்கியத்தை அவர்கள் வெளியிட்டதை நான் பத்திரிகையில் படித்தேன்.

ஆகவே நல்லவர்களை அரவணைத்துக் கொள்ள கரும்புக் கரமும் — நல்லவைகளைத் தருவதற்கு திருக்கரமும் — நாச வேலைகளைத் தடுக்க இரும்புக் கரமும் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மிகமிகத் தேவை.

இந்த மாமன்றத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் தமிழகத்தினுடைய ஆளுநர் அவர்களுடைய தலைமையில், அந்நாள் முதலமைச்சரும், எந்நாளும் நம்முடைய இதயங்களில் கொலுவீற்றிருப்பவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

தொடங்கப்பட்ட நேரத்தில் எத்தனையோ வகையான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. எப்போதுமே எந்த மாநிலத்திலும், எந்த நாட்டிலும் ஒரு அரசினை நடத்துகிற கட்சி ஒரு காரியத்தைத் தொடங்குகிறதென்றால் அதை அந்த மாநிலத்திலே உள்ள அல்லது அந்நாட்டிலே உள்ள எல்லாப் பகுதி மக்களும் முழுமையாக ஒத்துக் கொள்வார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஜனநாயகத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகளும் அவைகளிடையே சிக்கல்களும், மனமாச்சரியங்களும் மண்டிக் கிடக்கிற வேளையில் எந்த ஒரு திட்டத்தை ஒரு அரசு உருவாக்கினாலும் அது பற்றி பல்வேறு கருத்துக்கள் பல பகுதிகளில் இருந்து வருவது வாடிக்கை. அந்த வகையில் தான் இந்தப் பரிசுச் சீட்டு பற்றியும் பல கருத்துக்கள் வெளியிடப்பட்டன. நாம் அந்தக் கருத்துக்களைக் கூறியவர்களுடைய தகுதியை, பெருமையை, மரியாதையை என்றைக்கும் குறைத்து மதிப்பிட்டது கிடையாது.

## தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி விளக்கம்

ஏனென்றால் பொதுவாக இன்றைய தமிழக அரசும், இதை உருவாக்கியிருக்கிற முன்னேற்றக் கழகமும், அந்தக் கழகத்தைத் தோற்றுவித்த எங்களுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும் மாற்றாருடைய கருத்துக்களுக்கு உடன்பட முடியாத நிலையிலும் அந்த மாற்றாரை மதிக்கக் கற்றுக் கொண்ட பண்பு வாய்ந்தவர்கள். அந்தக் காரணத்தால் தான் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்கள் இருந்தாலும் எங்களுடைய நிலைமைகளை விளக்கி சில திட்டங்களில் நாங்கள் தொடர்ந்து நடை போட வேண்டியவர்களாக இருக்கிறோம்- அப்படிப்பட்ட திட்டங்களில் ஒன்றுதான் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டமாகும்.

இதை நாங்கள் ஆரம்பித்த நேரத்தில்தான் எதிர்ப்புக்கள் வந்ததே தவிர இதற்கு முன்னால், இத் திட்டம் ஆரம்பிக்கப் பட்ட மாநிலங்களைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

### இருவகை எதிர்ப்பு

எதிர்ப்பில் இருவகை; நல்ல எண்ணத்தோடு சொல்லப்படுகிற எதிர்ப்புக் கருத்து ஒரு வகை; இதனால் இந்த அரசுக்குப் பணம் சேருகிறதே, அப்படிச் சேருகிற பணத்தைக் கொண்டு நல்ல காரியங்களைச் செய்கிறார்களே, அதனால் இந்த அரசை நடத்துகிறவர்களுக்கு நல்ல பெயர் ஏற்படுமே, அதனால் தொடர்ந்து இவர்களே ஆள நேருமே, அப்படி ஆள நேரிட்டால் நாம் காலி செய்து விட்டு வந்த இடத்தை மீண்டும் பெற முடியாதே! என்கிற எரிச்சலில் பல பேர் எதிர்ப்பைத் தெரிவிப்பது உண்டு.

எதிர்ப்புக் கருத்துக்கள் வரும்போது அது எந்த உள்ளத்திலிருந்து வருகிறது என்று பகுத்துணர்ந்து, முடிந்த வரையில் இணங்கி நடப்பதும், முடியாதவற்றை வெளிப்படையாக எடுத்துச் சொல்வதும் வழக்கமாக இந்த அரசிடம் இருந்து வருகிறது என்பதை தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள் அறிவார்கள்-

பரிசுப் போட்டி, பரிசுத் திட்டம் இவைகளெல்லாம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் புதுமையானதல்ல-

பெரிய பத்திரிகைகளில் ஒன்றான விகடன் வாரப் பத்திரிகையில் ஒரு காலத்தில் சாதாரண அறிவுப் போட்டி கூட அல்ல பகுத்தறிவுப் போட்டியே தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது- ஆனால் அன்றைய தினம் எழாத எதிர்ப்பு இன்றைய தினம் எழுகிறது- ஒரு கூப்பன் ஒரு ரூபாய் வீதம் ஒவ்வொருவரும் 9, 10 என்று எழுதி அனுப்புவார்கள்- 5000, 10000 என்கிற பரிசை ஒரே நபர் பெற முடியாது- சரியாக விடையையெழுதியவர்கள் அனைவருக்கும் அது பகிர்ந்தளிக்கப்படும்-

ஆகவே 10 ரூபாய்க்கு கூப்பன் வாங்கி, பரிசாக ஐந்தே முக்கால் ரூபாயை பெறுவார்கள்- ஆனால் இப்போது அப்படியல்ல; ஒரு ரூபாய் கொடுத்தால், போனால் போகும் — வந்தால் லட்ச ரூபாய் வரும்- இது இன்றைய பரிசுச் சீட்டு முறை- போனால் போகிறது என்றால் யாருக்குப் போகிறது? தனிப்பட்ட பத்திரிகைக்காரருக்கா? அல்ல, தனிப்பட்ட ஆலை அதிபருக்கா அல்ல; தனிப்பட்ட முதலாளிக்கா? அல்ல, நீங்கள் தருகிற ஒரு ரூபாய் உங்களுடைய கருவூலத்திற்குத் தான் போகிறது- உங்களுடைய பெட்டிக்குத் தான் போகிறது- ஒரு ரூபாய் கொடுத்தேன்- அந்தப் பணம் என் பெட்டியில் இல்லையே என்று யாரும் கேட்கக் கூடாது-

இந்த அரசாங்கத்தினுடைய பெட்டி உங்களுடைய பெட்டி தான்- இந்த அரசாங்கத்துக்கு நீங்கள் தருகிற அந்தப் பணம் ஏழை எளியவர்களுக்கு, மருத்துவ வசதி, கல்வி வசதி, சேரிகளைச் சீர்திருத்தும் வசதி போன்றவைகளுக்காக செலவு செய்யப்படுகிறது-

இந்தத் தொகையை அரசாங்கக் கருவூலத்தோடு இணைத்து விடாமல், தமிழ் நாட்டினுடைய சிறப்பு நலநிதி என்று தனியாக ஒரு நிதியமைக்கப்பட்டு, தேவைப்படுகிற நல்ல காரியங்களுக்காகச் செலவு செய்வது என்ற நிலையில் இன்று இந்தத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறோம்-

10 லட்ச ரு- பரிசு பெற்ற நண்பரின் உடலில் மாற்றம் ஏற்படாவிட்டாலும், அவருடைய உள்ளத்திலும் குடும்பத்திலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குமென்

நம்புகிறேன்- 5 ல

பரிசை கோவை

தைச் சேர்ந்த

கவுண்டர் என்ற

பெருங்குடி மகனார்

கிறார்- இந்தப் ப

பார்த்துத் தான்

நடைபெற்ற 19-கு

லும், இதுவரை ஒரு

ருக்குக் கூட இந்தப்

வில்லை- பணக்கா

விழாமல் ஏழை

டாளி மக்களுக்கே

யில் பரிசு விழுந்தி

பரிசு பெற்றவர்க

பத்திரிகையாளர்க

தித்து இந்தத்

எப்படி பயன்படுத்து

சொல்கிறார்கள்-

நான் அவர்க

கேட்டுக் கொள்கி

லட்சம் பெற்றவர்க

ரம் என்றும், 5 லட்

வர்கள் 10 ஆயிரம்

10,000 பெற்றவர்க

ஐநூறு என்ற அ

பொது நன்மைக்கா

கள் என்ற செய்தி

வார்களேயானால்,

பெற்ற லட்சத்தை,

ரத்தைப் பார்த்து

கள் பொறுமைப்ப

டார்கள்- திருஷ்

இருக்கும்- அந்த வ

தப் பெரும் பரிசைப

நண்பர்கள் கூடுமா

தப் பரிசுப் பணத்தி

சிறு தொகையையா

காரியங்களுக்குப் ப

வேண்டுமென்று

கொள்கிறேன்.

## படை வீரர்க

பார்மோசாவின் தலைநகரான தைப்பேயின் இரவு விடுதிகளில் விஸ்கி போத்தல்களுக்கும் வேக வைத்த இறைச்சிக் கூடைக்கும் இடையே இப்போதெல்லாம் கல்லூரிப் பாடப் புத்தகங்களும் பதுங்கிக் கிடப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

நள்ளிரவு வேளையில் போதையுடன் பொழுதைக் கழிக்க அங்கு வரும் அமெரிக்கப் படை வீரர்களுக்கும் மற்றவர்களுக்கும், துள்ளிவந்து அவர்களின் மடியில் துவண்டுவிழுந்து, மதுவால் அவர்களின் கிண்ணத்தை நிரப்பி, தங்களின் சாகசத்தால் அவர்களின் எண்ணத்தைக் கிண்டிக் கிளறிவிடும் பருவக்குமரிகள், பசி தீர்க்கும் பாவையர் பலர் அந்த நகரின் கல்லூரி மாணவிகள் என்பது ஊரறிந்த உண்மையாகிவிட்டது.

### சம்பாதிக்கும் ருசி

படித்துக் கொண்டிருக்கும் போதே சுலபமாக சம்பாதிக்க, அந்த நகர கல்லூரி மாணவிகள் தேர்ந்தெடுத்தி

ருக்கும் சுலபமா

தைப்பேயில் உள்

கடைகள் (பார்க

விடுதிகள், பெண்

உணவகங்கள், ஆ

இரவு நேரங்களி

வியட்நாமிலிருந்து

வுக்காகச் செல்

வீரர்களின் களைப்

களிப்பைத் தாண்

சம்பாதிப்பதில்

ருசி ஏற்பட்டுள்ள

ஒவ்வொரு மா

4000 அமெரிக்க

வுக்காக தைப்பே

சென்று வருகின்ற

ஆண்டில் மட்டும்

சம் வீரர்களுக்கு

னேர் தைவானுக்

ஆறு கோடியே 7

அமெரிக்க டால

விட்டிருப்பதாக

வின் அரசாங்க

கூறுகிறது.

### அழகு, திறமை

மேல் படிப்புக்

லாத பெண்கள்,

இரவு விடுதிகளி

லும் பணிபுரிந்து

பணத்தைக் கொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன்று நான்
லட்ச ரூபாய்
மாவட்டத்
குமாரசாமி
ற விவசாயப்
ர் பெற்றிருக்
பரிசு ஆள்
ன் விழுகிறது-
குலுக்கல்களி
ஒரு பணக்கார
ந்தப் பரிசு விழ
க்காரர்களுக்கு
ழ எளிய பாட்
கே இதுவரை
ந்திருக்கிறது-

ர்கள் உடனே
களைச் சந்
ந் தொகையை
த்துவது என்று

களையெல்லாம்
கிறேன்- 10
ர்கள் 50 ஆயி
லட்சம் பெற்ற
ரம் என்றும்,
ர்கள் ஆயிரம்,
அளவிலாவது
காக தந்தார்
சய்தியை தரு
ல், அவர்கள்
த, பத்தாயி
ந்து மற்றவர்

கு
ய

மப்பட மாட்
நஷ்டிப்படாமல்
வகையில் இந்
சைப் பெறுகிற
மானவரை அந்
த்திலே ஒரு
யயாவது நல்ல
ப் பயன்படுத்த
கேட்டுக்

# ஆடவருடன் குமரிகள் குளிக்கும் ஜப்பானிய வழக்கம் அழிகிறதாம்!

ஜப்பான் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மேற்கத்திய நடைமுறைகளைக் காப்பியடிக்கத் துவங்கியதால் ஜப்பானியர்கள் தங்களுடைய ரசமான பழக்கம் ஒன்றிற்குத் தலை முழுக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஆண்கள் பகிரங்கமாக நிர்வாணமான இளம் பெண் ஒருத்தியுடன் சேர்ந்து குளிக்கும் பழக்கம்தான் அது.

மக்கள் நெரிசல் மிக்க இந்த ஜப்பானிய நாட்டில் ஆண்களும் பெண்களும் பொதுக் குளியல் இடங்களில் சேர்ந்து குளிக்கும் பழக்கம் அபூர்வமானதல்ல; அது சர்வசாதாரணமானதாகவும் அதைத் தவிர வேறு வழி இல்லாததாகவும் இருந்த காலம் ஒன்று உண்டு.

இத்தகைய நீராடலின் மகிமைக்காக உலகம் முழுவதும் பிரக்கியாதி பெற்ற நாடாகவும் ஜப்பான் இருந்தது அந்த மகிமைக்கு இப்பொழுது ஆபத்து வந்திருக்கிறது.

தற்போதைய துரதிர்ஷ்டவசமான நிலை என்னவென்றால் சேர்ந்து குளிக்கும் நீராடல் விடுதிகள் எங்கு பார்த்தாலும் இருந்தகாலம் போய் பொதுக் குளியல் விடுதிகளை மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிப் பிடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

### பாகப்பிரிவினை

அண்மையில் சில ஆண்டு காலம் வரைகூட கிராமப் பகுதிகளில் சேர்ந்து குளிக்கும் பழக்கம் நிறைய இருந்தது. ஆனால் சுற்றுப் பயணிகள், ஜப்பானியர்களும் சரி, வெளிநாட்டுக் காரர்களும் சரி நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் தலை காட்டத் துவங்கியதும் நாட்டிலுள்ள பெரும்பாலான நீராடல் ஸ்தலங்களில் ஆண் குளியலறைக்கும்பெண் குளியலறைக்குமிடையே பாகப் பிரிவினை செய்து தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டுவிட்டன.

இருப்பினும் சேர்ந்து நீராடுவதில் தீவிர ஆர்வம் கொண்டவர்கள் முற்றாக நம்பிக்கை இழந்துவிடவும் தேவையில்லை.

மிகவும் ஒதுக்குப்புறமான கிட்டத்தட்ட போக்கு வரத்துத் தொடர்பு அறவே இல்லாத விவசாயச் சமூகங்களிலும் வெகுநில வென்னீர் ஊற்றுக்களிலும் சேர்ந்து குளியலாடும் பழக்கம் இன்னும் இருக்கிறது ஆனால் சேர்ந்து குளிக்க இளவட்டக் குமரிகள் கிடைப்பதுதான் அபூர்வம், பெரும்பாலாக விவசாயிகளின் மனைவிகளாக உள்ள நடுத்தர வயது மாதுகள் தான் கிடைக்கிறார்கள்.

இளம் மேற்கத்தியப் பெண்ணொருவர் அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பேசிய போதுதான் டோக்கியோவில் ஜப்பானியக் குடும்பமொன்றுடன் சில மாதங்கள் சேர்ந்து வசிக்க ஜப்பானுக்கு வருமுன்னதாக அக் குடும்பத்தின் ஆண்களுடன் சேர்ந்து நிர்வாணமாகக் குளிக்க வேண்டியிருக்குமே என்று நினைத்து பீதி அடைந்ததாகச் சொன்னார். ஆனால் இங்கு வந்து பார்த்த பிறகு அவரது அச்சங்கள் ஆதாரமற்றவையாகி விட்டன.

ஆனால செய்தித்தாள் வாசகர்களுக்குச் சுவையான தீனி போலுற தகவல் அண்மையில் ஒரு பிரபலப் பத்திரிகையில் வெளியானது. இரண்டு வெளிநாட்டு நாகரீக யுவதிகள் வடக்கு ஜப்பானில் ஒதுக்குப்புறமான வெந்நீர் ஊற்றுக் கரையிலுள்ள ஒரு குளியல் பகுதியில் நிர்வாணமான ஜப்பானிய ஆண்களுடன் சேர்ந்து குளிக்கும் அதிர்ச்சியான அனுபவம் தங்களுக்கு ஏற்பட்டது பற்றி அப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்.

டோக்கியோவில் ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிய அமெரிக்க வெளிநாட்டு சேவை அதிகாரியான டேவிட் ஆஸ்பார்ன் தமது சுவையான பொது நீராடல் அனுபவங்களை அண்மையில் ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார் அவர் கூறுவதாவது:—

### குயிலோசை கேட்டது

"1951ல் ஹொக் கைடோ சுகவாசஸ்தல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தேன். அந்த ஹோட்டலில் இன்றைக்கும் ஆணும், பெண்ணும் நிர்வாணமாக சேர்ந்து குளிக்கிறார்கள். ஆனால் குளியலறையில் மட்டும் தான் அப்படி. மற்ற இடங்களில் தனித்தனிதான். நான் நிர்வாணமாக ஆடை மாற்றிக் கொள்ளும் அறைக்குள் போனேன். என் மேலாடையை எடுக்கக் கையை நீட்டினேன். பின்னாலிருந்து ஒரு குயிலோசை கேட்டது. "நாங்கள் பெண்கள் பள்ளியொன்றைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குத் தெரிந்த வரையிலான ஆங்கிலத்தை உங்களுடன் பேசிப் பழக்கப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறோம்" என்று அங்கே நின்ற மூன்று பெண்களில் ஒருத்தி சொன்னதும் அதிர்ந்து போனேன்.

"மூன்று பெண்களின் உடல்களும் முழுக்க முழுக்க ஆடையினால் மூடப்பட்டிருந்த போதிலும், நான் நிர்வாணமாக இருந்ததால் வெட்கிப் போனேன். தாங்கள் நிர்வாணமாக இல்லை என்ற துணிச்சலோடுதானோ என்னவோ அவர்கள் ஆண்கள் ஆடை மாற்றுமிடத்திற்குள் அடி எடுத்து வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் கொஞ்சமாவது வெட்கம் வேண்டாமா? ஆங்கிலம் பேசிப் பழகுவதற்கு ஒரு வெளிநாட்டுக்காரரை அணுக அந்த இடம்தான் கிடைத்ததா?

"எப்படியோ நான் சமாளித்துக் கொண்டு. நீங்கள் என் மனைவியுடன் பேசிப் பாருங்கள். அவள் அடுத்த அறையில் இருக்கிறாள். அருமையாக ஆங்கிலம் பேசுவாள்.

ஹொக்கைடோவில் எஞ்சிய பிரபல பொதுக் குளியல் விடுதிகளில் ஒன்று. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அந்தப் பழக்கத்திற்கு தலைமுழுகியது. தெற்கு, மத்திய ஜப்பான் பகுதிகளைச் சேர்ந்த கொஞ்சம் வெட்கு சுபாவமுள்ள பெண்களின் புகாரே தெற்குக் காரணம் அந்த விடுதி நிர்வாகத்தினர் நடுவே ஒரு சுவரெடுத்து ஆண்களையும் பெண்களையும் பிரித்து விட்டார்கள். நான்கு குளங்கள் பிரத்தியேகமாகப் பெண்களுக்கென்றும், ஒன்பது குளங்கள் ஆண்களுக்கென்றும் உள்ளன. பெண்கள் குளத்திற்குள் ஆண்கள் போகக்கூடாது.

ஆனால் பெண்கள் விரும்பினால் மூன்றே அடி உயரமுள்ள சுவற்றைக்கடந்து ஆண்கள் பக்கம் செல்லலாம். ஆனால் வெளிநாட்டுக்கார ஆண்பிள்ளை ஒருவர் இப்படி அலுத்துக் கொள்கிறார். "பெண்கள் சுவற்றைத் தாண்டி எங்களிடம் வந்து என்னய்யா பிரயோசனம்? குறைந்த பட்சம் 60 வயதுக்காரிகள் தான் அப்படி வருகிறார்கள்.

சேர்ந்து குளிக்கும் பழக்கம் செத்து வந்தாலும் பகிரங்கமாக தொட்டிக்குள் கிடந்து குளிக்கும் பழக்கம் பெருகி வருகிறது. அதிலும் வெதுவெதுப்பான வெந்நீர்த் தொட்டி என்றால் இன்னும் விசேஷம்.

ஜப்பானிய ரக ஹோட்டல்களில் எல்லா அறைகளிலும் அத்தகைய தொட்டியிருக்கும்.

மணக்கும் சைப்ரஸ் மரத் தொட்டியும் உள்ளது. அது மிகவும் குறுகலாக இருக்கும். கால்களை மடக்கி உள்ளே உட்கார்ந்து கொள்ள வேண்[illegible]

வெளியே நின்று உடலை ஒ[illegible]ாக அலசிக் கழுவிக் கொண்ட பிறகு தொட்டிக்குள் இறங்க வேண்டும். குடும்பத்தினர் அனைவரும் ஒரே தொட்டித் தண்ணீரில் மாற்றி மாற்றி மூழ்கி எழுவதும் உண்டு.

### 30,000 குளியல் விடுதி

ஜப்பானில் மொத்தம் 3000 குளியல் விடுதிகளிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெரிய நாடுகளில் அதிகாலை 4-00 மணிக்கே கூட பல திறந்திருக்கின்றன. அதிகாலையில் எழுபவர்கள் 110 டிகிரி வெப்பமுடைய வெந்நீரில் விழுந்தெழுந்து, பிறகு புத்துணர்ச்சியுடன் வேலைக்குச் செல்கிறார்கள்.

குளிக்கும் போது கைக்குட்டையளவு துணியை மட்டுமே உடம்பு தேய்த்துக் கொள்ள வைத்துக் கொள்வார்கள். திடீரென அறைக்குள் பெண்கள் புகுந்து விட்டால் மூடி மறைத்துக் கொள்ள அந்தத் துண்டு போதாதென்று அனுபவசாலி ஒருவர் அங்கலாய்க்கிறார்.

### இளமை தரும் தங்கத் தொட்டி

மத்திய ஜப்பானில் உள்ள ஒரு ஹோட்டலில் 22 காரட் தங்கத்தினால் செய்த தங்கத் தொட்டியுள்ளது.

180 செண்டி மீட்டர் நீளம் உள்ள இத் தொட்டியில் குளித்தால் இளமை திரும்பும் என்கிறார் இந்த ஹோட்டலின் நிர்வாகி. ஆனால் அதில் இரண்டே நிமிடம் குளித்து முடிப்பவருக்கு நிச்சயம் அதிர்ச்சி காத்திருக்கும் சுமார் 10 வெள்ளிக் கட்டணத்திற்கான பில்தான் அது.

# ...களின் மடியில் பருவ மாணவிகள்!

மான வழி இது.
உள்ள மதுபானக்
ார்கள்), இரவு
பண்மை வழியும்
, ஆகியவைகளில்
களில் பணிபுரிந்து
ந்து அங்கு ஓய்
செல்லும் படை
ளைப்பை போக்கி,
ாண்டி, கைநிறைய
ல் அவர்களுக்கு
ள்ளது.

மாதமும் சுமார்
க்க வீரர்கள் ஓய்
ப்பே நகருக்குச்
கின்றனர். சென்ற
டும் நான்கு லட்
க்கும் அதிகமா
ானுக்குச் சென்று
யே 70 லட்சம்
டாலர்களை செல
ாக தேசிய சீனா
ாங்க மதிப்பீடு

றமை, சாகசம்
ப்புக்கு வசதியில்
கள், இவ்விதம்
களிலும் பார்களி
ந்து கிடைக்கும்
கொண்டு மாலை

நேரக் கல்லூரி வகுப்புகளுக்குச் செல்கின்றனர். மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை படிப்பு. பின்னர்,

நள்ளிரவுவரை ஏன் அடுத்த நாள் காலைவரைகூட வேலை. அவர்களுக்குச் சராசரி சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 1200 தைவான் டாலர்கள் கிடைக்கிறது. உணவும் உறைவிடமும் இலவசம். சம்பளத்தோடு வாடிக்கையாளர்களிடம் இருந்து அவர்களுக்குக் கிடைக்கும் கிம்பளத்திற்கு அளவே இல்லை. அவரவர்களின் அழகு, திறமை, சாகஸம் ஆகியவற்றைப் பொறுத்தது.

தைவானின் பார்களும், நைட் கிளப்புகளும் ஏறக்குறைய ஒரே மாதிரித் தோற்றம் அளிப்பவை. காசு போட்டால் பாடும் இசைத்தட்டுப் பெட்டிகள் (ஜுக்பாக்ஸ்) நவீன அமெரிக்க "போப்" இசைகளை அலறிக் கொண்டு இருக்கும். ஆனால் பாரைவிட. நைட்கிளப்பில் வேலை செய்வது சிறிது அதிக மதிப்புடையதாக பெண்கள் கருதுகின்றனர்.

பார்களில் பெண்கள் வாடிக்கையாளர்களுக்கு அருகில் நெருக்கமாக அமர்ந்து இன்னும் பச்சையாகக் கூறுவதானால் வாடிக்கையாளர்கள் மடிகளில் அமர்ந்து அவர்களுக்கு மது ஊற்றி, மகிழ்ச்சியூட்டிப் பரிமாறுவர். வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு சுலபமாக மசிந்துவிடுவார்கள்.

ஆனால் நைட் கிளப்புகளின் நிலைமை சிறிது மாற்றமானது. அங்குள்ள பணிப் பெண்கள் சிறிது அடக்கத்துடன் நடந்து கொள்வர். மது ஊற்றிக் கொடுப்பதுடன் அருகே அமர்ந்து அரட்டை அடிப்பதுடன் சரி. அதிகம் பிடிகொடுக்க மாட்டார்கள். வந்த ஆசாமியை மனதுக்குப் பிடித்துவிட்டால் அவர்களுடன் வெளியில் செல்வதும் உண்டு. இந்த வழிகளில் நைட்கிளப் பணிப்பெண்ணுக்கு உபரியாக மாதம் ஒன்றுக்கு 200 பவுன் கிடைக்கிறது.

### லோர்னாவின் அனுபவம்

பீட்டில்ஸ் பாணியில் தலைமுடியை வெட்டிக்கொண்டு, பார் ஒன்றில் பணிபுரியும் 19 வயதுப் பருவ நங்கை லோர்னா இந்தப் பணிப்பெண் வேலை தனக்கு மிகவும் பிடித்துவிட்டதாகக் கூறுகிறாள். அவள் பாரில் வேலை செய்தாலும் மதுபானம் எதுவும் அவளுக்குப் பிடிக்காது.

அங்கு வரும் குடிகாரர்கள் மிகவும் வற்புறுத்தினால் அவர்கள் செலவிலேயே ஒரு கொக்கோ கோலாவைக் குடிப்பாள். அங்கு ஒரு கொக்கோ கோலாவின் விலை 40 தைவான் டாலர் (6 சிலிங்) அதில் அவளுக்குக் கிடைக்கும் கமிஷன் 10 தைவான் டாலர். "இங்கு மிகவும் சுலபமாகச் சம்பாதிக்கிறேன்" என்று அவள் பெருமையுடன் கூறுகிறாள்.

### அமெரிக்கா செல்வேன்

இரவு 8 மணிமுதல் அடுத்த நாள் அதிகாலை 5 மணிவரை அங்கு வேலைசெய்கிறாள். மாதம் ஒன்றுக்கு 1400 தைவான் டாலர் கிடைக்கிறதாம். நான் இப்போது ஆங்கிலம் நன்றாக பேசக் கற்றுக் கொண்டேன், யார் கண்டார்கள் அமெரிக்கர்கள் யாராவது என்னைத் திருமணம் செய்துகொண்டு அமெரிகாவுக்கே அழைத்துச் சென்றாலும் செல்லலாம். அமெரிக்கப் படை வீரர்கள் பொதுவாக நன்றாகத்தான் நடந்து கொள்கின்றனர். சில வேளைகளில்தான் கெட்ட குணம் படைத்தவர்களிடம் மாட்டிக் கொள்வோம். சிலர் எங்களை வாய்க்கு வந்தபடி ஏசுவர். நாங்களும் அவர்களை பதிலுக்குப் பதில் திட்டிவிடுவோம்" என்றாள் லோர்னா.

இப் பகுதியிலிருந்து அமெரிக்கர்கள் சென்றுவிட்டால் என்ன ஆகும்? என்று கேட்டபோது அவளது முகத்தில் ஏமாற்றமே தொனித்தது. என்றாலும் சமாளித்துக் கொண்டாள். உள்ளூர்க்காரர்கள் இங்கு அதிகமாக வரமாட்டார்கள். நைட்கிளப்புகளை மூடிவிட நேரும். நான், டைப் அடிக்கக் கற்றுக் கொண்டு எங்காவது ஒரு கம்பெனிக்கு ஒரு காரியதரிசியாவதற்கு முயற்சி செய்வேன் என்றாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டிவரச் சென்ற கணவனை இரும்பால் அடித்தாள்

# 21 தினங்கள் மட்டுமே தாம்பத்திய வாழ்வு!

## விவாகரத்துச் செய்ய நீதிமன்றம் அனுமதி

**"இந்த இளம் ஜோடி ஆக 21 தினங்கள் மாத்திரமே தாம்பத்திய வாழ்வு நடத்தியது. அந்த நாட்களிலும் மணமகள் ஆறு தடவை தனது தாய் வீட்டுக்கு சென்று தங்கி இருந்தாள். பின்னர் நிரந்தரமாகவே தாய் வீட்டில் தங்கி விட்டாள். கடைசித் தடவை மாப்பிள்ளை அவள் வீட்டுக்குச் சென்று வரும்படி கேட்ட போது அவள் இவரது தலையில் ஒரு இரும்புக் கம்பியினால் ஓங்கி அடித்தாள்".**

அக்கரவிலையைச் சேர்ந்த சிசிலியாவை என்னும் பெண்ணிடமிருந்து விவாகரத்து கோரி ஐ. எம். பேமசேகரா என்பவர் தாக்கல் செய்துள்ள வழக்கு கம்பஹா நீதவான் திரு. பரின்தா ரனசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது மனுதார் தரப்பு வழக்கறிஞர் மேற்கண்டவாறு கூறினர்.

பேம சேகரா தனது சாட்சியத்தில் கூறியதாவது: "நான் சிசிலியாவை 1968 ஜனவரி 12-ம் திகதி திருமணம் செய்தேன். அப்போது எவ்வித தகராறும் இருக்கவில்லை. திருமணத்தின் பின்னர் அவள் என் வீட்டிலேயே தங்கி இருந்தாள். அடிக்கடி தாய் வீட்டுக்குச் செல்வதும் உண்டு.

"என்னைத் தாக்கிய அவளுடன் இனி வாழ்வதில் பயன் இல்லை. ஆகவே நான் விவாகரத்து கோருகிறேன்" என்றார்.

பேம சேகராவின் குற்றச்சாட்டுகளுக்கு சிசிலியா எதிர்ப்புத் தெரிவிக்காததால் விவாகரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. (ம)

## பொலீஸ் கான்ஸ்டபிள் பெட்டி ரயிலில் திருட்டு

ரயில் திருடர்களின் கைங்கரியத்துக்கு கடைசியாக இரையானவர் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள்! அனுராதபுரத்துக்கும் - கல்கமுவவுக்கும் இடையில் இவர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது தனது பெட்டி படுக்[illegible] இழந்து ஒட்டாண்டியானார்.

வலக்காப்பொலைக்கு மாற்றலாகிச் சென்ற இந்த கான்ஸ்டபிள் இரண்டாவது வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்தார்.

மலசலகூடத்துக்கு சென்று வந்து பார்த்தால் அவருடைய பெட்டியைக் காணோம். யூனிபோரம், மற்றும் உடைகள் யாவும் களவு போய்விட்டன. வேறு வழியில்லை. கல்கமுவா பொலீஸ் நிலையத்துக்குப் போய் முறைப்பாடு செய்தார். (ம)

## குழந்தையின் முகத்தை தலையணையுடன் அமுக்கினர்

இராணுவ வீரர் ஒருவர் பதினெட்டு மாத வயதுடைய தனது மகனின் காலைப் பிடித்துக் கொண்டு, முகத்தை தலையணையுடன் அமுக்கிப் பிடித்ததைத் தான் கண்டதாக ஒரு பெண் பிரிஸ்டல் அஸைஸ் கோர்ட்டில் கூறினர்.

மத்தியூ என்னும் அக் குழந்தையைக் கொல்லவில்லையென்று, 18 வயதான இராணுவ வீரர் ஜேம்ஸ் ஜோர்ஜ் பார்க்கர் சாட்சியமளித்தார்.

24 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான, விவாகரத்து பெற்றுள்ள திருமதி கிறீஸ்டீன் கிங் சாட்சியமளிக்கையில் கூறியதாவது—

"முகத்தைக் கவிழ்த்து தலையணையில் குழந்தையை பார்க்கர் போடுவதைக் கண்டேன். அந் நேரம் குழந்தைக்கு ஆபத்து என்று நான் உணரவில்லை. எனவே அடுத்த அறைக்குள் சென்று நாம் இருவரும் கட்டிப் பிடித்து முத்தம் இட்டுக் கொண்டோம். அப்பொழுது குழந்தைக்குக் கிட்டே என்னைப் போகவிடவில்லை.

"நான் கீழ்க்கட்டுக்குப் போய் எட்டு நிமிடங்களின் பின், குழந்தையுடன் கீழிறங்கி அம்புலன்ஸைக் கூப்பிடும்படி கூறினர். அயலவர் ஒருவர் குழந்தைக்கு மூச்சு வர சிகிச்சை அளித்தார்" என்று கூறினர்.

"குழந்தையை அப்படிவிட்டால் அது இறந்துவிடும்" என்று திருமதி கிங் கூறியதாக பார்க்கல் ஒப்புக் கொண்டார்.

திரு. ஐயன் ஹில் கியூ. ஸி. (எதிரியின் வழக்கறிஞர்)— அவன் எதைக் குறிப்பிட்டாள்?

பார்க்கர்— நான் குழந்தையின் தலையை தலையணையில் அமுக்கியதாக அவள் நினைத்தாள்.

திரு. ஹில்— அப்படிச் செய்தாயா?

பார்க்கர்— இல்லை.

மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ம-15)

## நீச்சலுடையில் மனைவியை வீதியில் விட்டு சென்ற நபர்

ஜார்போன், ஜுலை 1

இரவல் உடையுடன் ஒரு பெண் வீடு திரும்ப வேண்டி ஏற்பட்டது. வீதி ஓரத்தில் நீச்சல் உடையுடன் மனைவியை விட்டு விட்டு கணவன் போய்விட்டதே இதற்குக் காரணம்.

இருபத்தொரு [illegible] சுஸான் பொலீஸாருக்குத் தெரிவித்ததாவது—

"நானும், பத்திரிகையாளரான எனது கணவரும் ஸ்பெயினில் விடுமுறை கழித்துவிட்டு வந்தோம். அருகேயிருந்த கடற்கரையில் குளிக்கப் போனோம்.

இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. சிகரட் வாங்கி வருகிறேன் என்று சொல்லிவிட்டு, எனது உடைகள், பணம் எல்லாவற்றுடனும் காரை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்" என்று முறையிட்டாள். (ம-15)


உங்களுக்கு எது எழுத வேண்டுமானலும்........................

அதை கவர்ச்சிகரமாக எழுத விரும்பினல்........................




பீட்டர்ஸ் சுப்பர் எழுதும் மை

ஸ்திரமான ஆறு வண்ணங்களிலும் வெளுக்கக் கூடிய ஒரு வண்ணத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

வீட்டிலும் அலுவலகத்திலும் பாவனைக்கு சிறந்தது பீட்டர்ஸ் சுப்பர் மை

விநியோகிப்பவர்கள்:

எம். டீ. குணசேன அன்ட் கம்பெனி லிமிட்டெட்,

கொழும்பு — கிளைகள்


## யாழ்ப்பாணம் கடுகதி பஸ்ஸுக்குள் ஆங்கில வெடி

வாழைச்சேனை, ஜுலை, 1

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பில் இருந்து, யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்ட கடுகதி பஸ்ஸில் இரு அரசாங்க ஊழியர்களுக்கிடையே எழுந்த விவாதம் பெரும் கைகலப்பில் முடிய இருந்தது, தவிர்க்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த கடுகதி பஸ்ஸில் இரு அரசாங்க ஊழியர்கள் பணம் செலுத்தி பதிவு செய்யப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து சென்றனர். அதில் ஒருவருக்கு இடம் திருப்தியின்மையால் அருகில் இருந்தவரை மெதுவாக நெருக்க ஆரம்பித்தார். இந்த சங்கடம் பொறுக்க முடியாத மற்றவர் சற்று கோபத்துடன் பேச ஆரம்பித்தார். சாதாரணமாகத் தொடங்கிய விஷயம் பெரும் விவாதமாகி ஒருவரை ஒருவர் ஆங்கிலத்தில் திட்டித்தீர்த்த வண்ணம் இருந்தனர்.

இப் பாஷை புரியாத கண்டக்டர், சக பிரயாணிகள் இந்த சூழ்நிலை மிஞ்சினல் கைகலப்பை ஏற்படுத்தி விடுமென அஞ்சி அவர்களை சாந்தப்படுத்தி வெவ்வேறு இடங்களில் இருவரையும் அமர வைக்க வேண்டிய நிலைக்குள்ளானர்கள். (ம)

## ஓடும் பஸ்ஸை நிறுத்த வழி

இனிமேல் பஸ் டிரைவர் லேசாகத் தூங்கினலும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை! ஜார்ஜிய எஞ்சினியர் யலாஷ்விலி டிரைவரின் உதவியின்றி பஸ்ஸை நிறுத்தும் எந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இந்த எந்திரம் ஸ்டீயரிங் சக்கரத்தின் உள்வட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள விசேட வலையத்தைத் தளர்த்திவிடும். அப்பொழுது ஒரு மணி அடிக்கும்;

அதன் பின்னர் "இக்னிஷன் சிஸ்டம்" வேலை செய்யாது டிரைவர் இன்னும் தூங்கிக் கொண்டிருந்ததால், இரண்டு மூன்று விநாடிகளில் பிரேக்குகள் தானகவே இயங்கும்; பஸ் நின்று விடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையின் கழுத்தைத் திருகி விடுவேன்

# கூட்டி வந்த இடத்துக்கு கொண்டு போய் விடு!

### அழகி லிடா கூறியதாக மாஜி கான்ஸ்டபிள் சாட்சி

"எங்கிருந்து என்னைக் கூட்டிக்கொண்டு வந்தீரோ, அங்கேயே திரும்பவும் கொண்டுபோய் விட்டுவிடும் என்று கூறி லிடா தொடர்ந்து மூன்று நாட்களாக எனக்கு தொல்லை கொடுத்து வந்தாள். திருப்பிக் கொண்டுபோய் விடாவிட்டால் எனது குழந்தையின் கழுத்தை திருகி விடுவதாக எச்சரித்தாள்"

கொழும்புதெற்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஓர் வழக்கில் முன்னைநாள் பொலீஸ் கான்ஸ்டபிளான டக்ளஸ் பெர்ணண்டோ என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வழக்கில் கல்கிசை, பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த தேமதாச தாப்ரே என்பவரின் மரணத்துக்கு காரணமாக இருந்ததாக சாம்சன் பெர்ணண்டோ, சோமபால தாப்ரே, பொடிமெனிக்கா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:—

"எனக்கு லிடா பொன்சேகாவை ஹேமா தாப்ரே வீட்டில் வசித்து வந்தபோது நன்கு தெரியும். லிடாவினது தந்தையார் ஓர் ஆயுள்வேத டாக்டராவார். அவரது மனைவிக்குச் சொந்தமான காணியொன்றை நானே பார்த்து வந்தேன்.

"ஒரு நாள் நான் லிடாவினது தந்தையாரைச் சந்திப்பதற்காக ஹுணுவையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது லிடாவைக் காண்வெண்டில் சேர்ப்பதற்கு விரும்புவதாகவும், அங்கு இடம் இப்போதைக்கு கிடைக்காதுபோல் தெரிவதால், அதுவரை பதுளையில் உள்ள எனது வீட்டில் வைத்துப் பராமரிக்கும்படி என்னிடம் அவளது தந்தையார் தெரிவித்தார்.

"அதன்படி லிடாவை பதுளைக்குக் கூட்டிச் செல்வதற்காக ஹேமதாச வீட்டிற்குச் சென்றேன். அப்போது ஹேமதாச என்னிடம் லிடா ஓர் இளம் பெண். ஆதையால் பெற்றோரின் அனுமதியின்றி உம்முடன் அனுப்பமுடியாதெனத் தெரிவித்தார். உடனே நான் அவளது தந்தையார் எனக்குத் தந்த கடிதத்தை அவரிடம் காட்டி அவளை பதுளைக்கு அழைத்துச் சென்றேன்.

"அங்கு கூட்டிச் சென்று மூன்று நாட்கள் ஆதவற்கிடையில் லிடா, எனக்குப் பெரும் தொல்லை தரத் தொடங்கி விட்டாள். அத்துடன் எனது குழந்தையையும் அடித்துத் துன்புறுத்தினாள். அதனால் நான் அவளைத் திரும்பவும் அவளது தந்தையாரின் இடத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு லிடா தன்னை ஹேமதாச வீட்டிற்கு கொண்டு சென்றுவிடும்படி வற்புறுத்தினாள்.

"அதனால் நானும், லிடாவும், அவளது தந்தையாரும் ஒரு காரில் கட்டுநெரியாவிலுள்ள அவளது தாயார் வீட்டிற்கு செல்ல முற்பட்டோம். இடைவழியில் லிடா காரிலிருந்து பாய்ந்து விட்டாள் ஓடிக்கொண்டிருந்த காரிலிருந்து பாய்ந்ததால் லிடா அடிபட்டு மயக்கமாகிவிட்டாள். உடனே நாங்கள் கோப்பி கொடுத்து மயக்கத்தைத் தெளிவித்தோம்.

"மயக்கம் தெளிந்த லிடா முதலாவது எதிரி ஒரு திறமைவாய்ந்த மந்திரவாதியெனவும், அவரிடம் தன்னை கொண்டு சென்றால் தனது வருத்தத்திற்கு அவர் மருந்து கொடுப்பார் எனவும் தெரிவித்தாள்.

"அதிகாலை 2 மணியளவில் நானும் லிடாவும் ஹேமதாசவின் வீட்டிற்குச் சென்றோம். அவ்வேளையில் ஹேமதாச வீட்டில் இல்லை. அங்கிருந்த அவரது மனைவியும், மூன்றாவது எதிரியும் அவர் எங்கோ வெளியில் சென்றுவிட்டதாகத் தெரிவித்தனர்" என்றார்.

அத்துடன் விசாரணை ஜுலை மாதம் 23-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம–7)

### மன்னார் ஆஸ்பத்திரி சம்பவம் தொடர்கிறது

மன்னார், ஜுலை. 1

மன்னார் வைத்தியமனைச் சம்பவம் நீண்டுகொண்டு போகின்றது. சில நாட்களுக்கு முன் இவ் வைத்தியமனையைச் சேர்ந்த இரு டாக்டர்கள் ஒரு பகல் வேளையில் அங்குள்ள வார்ட்டினுள் நோயாளர் முன்னிலையில் வாக்குவாதமிட்டு இருவரும் மற்போர் புரிந்தது வாசகர்கள் அறிந்ததே.

இந்த அசம்பாவிதச் சம்பவத்தையிட்டு, இரு டாக்டர்களுள் மூப்புடையவர் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து மேலிடத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

மன்னார் — வவுனியா பகுதிக்கு பொறுப்பான வைத்திய அட்சகர் இது சம்பந்தமான முதல் விசாரணை ஒன்றை அண்மையில் நடத்தியுள்ளதாக அறியப்படுகிறது.

இவ் விசாரணையின்போது இரு டாக்டர்களும் ஒருவர்மேல் ஒருவர் பல குறைபாடுகளையும் சுமத்தியதுடன், இன்னும் பல சம்பவங்களும் வெளிவந்ததாக அறியப்படுகின்றது. விசாரணையை முடித்துக் கொண்ட வைத்திய அட்சகர் தமது அறிக்கையை மேலிடத்துக்கு அனுப்ப இருப்பதாகத் தெரிகின்றது. (ம– 185)

### அப்பாடா! என்ன வேகம்?

"டி. யு – 144 என்ற சோவியத் விமானம் இரண்டாம் முறையாக ஒரு மணி நேரத்திற்கு மேல் வெள்ளோட்டம் விடப்பட்டது. அப்பொழுது மணிக்கு 1,344 மைல் வீதம் (ஒலியைப் போல் இருமடங்கு வேகத்தில்) அது பறந்தது. பத்து மைல் உயரத்திற்குமேல் இதே வேகத்தில் அது பல நிமிடங்கள் பறந்தது.

எட்வர்டு யெலியான் என்பவர் இந்த வெள்ளோட்டக் குழுவின் தலைவராக இருந்து விமானத்தைச் செலுத்தினார். மே 11-ல் இதே உயரத்தில் வெள்ளோட்டம் விடப்பட்ட பொழுது, இந்த விமானம் மணிக்கு 1,256 மைல் வேகத்தில் சென்றது.

இதற்கு முன்னர் பயணி விமானம் எதுவும் இவ்வளவு வேகத்தில் பறந்ததில்லை.

"டி. யு. 144" விமானத்தை நிர்மாணித்த பேரவை உறுப்பினர் ஆந்திரிதுபலேவ், விமானத்தின் பயணம் குறித்தும், விமானிகளின் திறமை குறித்தும், மிகுந்த திருப்தி தெரிவித்தார்.

"இந்த விமானம் பூனவரைவு செய்யப்பட்டபடி மணிக்கு 1,550 மைல் வேகத்தில் செல்லும்" என்று அவர் கூறினார்.

### எதிரியை விடுதலை செய்து வழக்காளிக்கு சிறை!

"தாமரைப் பூ பிடுங்கும்போது எதிரி என்னைச் சுட்டார். நான் திரும்பிப் பார்த்தேன், பாவித்த தோட்டாவை எதிரி வீசுவதையும், துவக்கிலிருந்து புகை கிளம்புவதையும் கண்டேன். அதன்பிறகு எதிரியும் இன்னொருவருமாக என்னைச் சாராயம் குடிக்கச் செய்தனர்."

நீர்கொழும்பு அசைஸ் கோட்டில் நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கில் ஏ. ஏ. டீ. பீ- அப்புகாமி மேற்கண்டவாறு கூறினார்.

ஏ. ஏ. டீ. பீ. அப்புகாமி என்பவரை, 1968 செப்டம்பர் 6ல் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாக தேரவெட்டியா குருப் காவலாளியான ஏ. ஏ. சைமன் சிங்கோ குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

எதிரியை விடுதலை செய்த நீதியரசர், முறைப்பாட்டுக்காரரான டயஸ் அப்புகாமிக்கு ஒரு மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

பயஸ் அப்புகாமி பொய்யான தகவல் கொடுத்தார் என்று ஜூரிமார் ஏகோபித்து முடிவு தெரிவித்திருந்தனர். (ம-15)


### பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவித மான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிஸ வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம். அண்ட வாதம், இடுப்பு வாதம். குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் விக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி, சிரங்கு, அல்லது கட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பல ஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பல ஹீனம். தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/–, 6 அவுன்ஸ் ரூ. 50/– 2 அவுன்ஸ் ரூ. 20/–. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு

### ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல். சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் – பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/–, 15 நாள் மருந்து ரூ. 20/–
தபால் செலவு –/70 சதம்.

வி. பி. பி- தபாலில் பெற்றுக் கொள்ளலாம்-

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**

வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழத்துப் பெண்கள் மத்தியிலுள்ள

# மினிஸ் கேர்ட் அணியும் வழக்கம் ஒழியட்டும்

## கலாசார அமைச்சருக்கு கவுன்சில் சிபார்சு

ஈழத்துப் பெண்கள் மத்தியிலுள்ள மினிஸ் கேர்ட் அணியும் வழக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என கலாசார அமைச்சின் ஆலோசனைக் கவுன்சில் கருத்துத் தெரிவித்துள்ளது.

கலாசார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா அண்மையில் இந்த ஆலோசனைக் கவுன்சிலை நியமித்திருந்தார். மினிஸ்கேர்ட் அணியும் வழக்கம் நமது சமூகத்துக்கு ஏற்றதல்ல என இந்த கவுன்சில் கருதுகிறது.

இந்த கவுன்சிலின் முதல் கூட்டம் நேற்று நடைபெற்ற போது "மினிஸ்கேர்ட் அணிவது போன்ற போலி நாகரிகத்திலிருந்து நமது பெண்களைப் பாதுகாக்க வேண்டும்" என அமைச்சருக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆபாச இலக்கிய இறக்குமதி, காம இச்சை, பயங்கரம், கொள்ளை ஆகிய உணர்ச்சிகளைத் தூண்டும் திரைப்பட இறக்குமதி, மட்டரக தென் இந்தியப் பத்திரிகைகளின் இறக்குமதி, இலங்கை வானொலியில் கீழ்த்தரமான பாடல்கள் ஒலிபரப்பு, பத்திரிகைகளில் நிர்வாண கோல படங்கள் பிரசுரம் ஆகியவற்றை ஒழித்துக் கட்ட அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கவுன்சில் வற்புறுத்தியது.

வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வசிக்கும் தமிழர்கள் பௌத்த மதக் கல்வி பெறவும், முஸ்லிம்கள் சிங்[illegible]வும் வேண்டிய ஏ[illegible] செய்ய வேண்டும் எனவும் கவுன்சில் கோரியுள்ளது. (ம)

## வெங்காயம் கொழும்பில் 28 சதம்

கொழும்பு, ஜூலை 2

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் சின்ன வெங்காயம் ஒரு ருத்தல் 28 சதமாக விற்கப்பட வேண்டும் என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உணவு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. பி. வி. ஏ. கே. பி. சேனரட்ன மேற்படி கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து உள்ளார்.

கொத்தமல்லி ஒரு ருத்தல் 34 சதமாகவும், சின்ன வெங்காயம் தவிர்ந்த ஏனைய வெங்காயங்கள் ருத்தல் ஒன்று 34 சதமாக விற்கப்பட வேண்டும் என்றும் அவர் உத்தரவு இட்டுள்ளார்.

## குருவானவர் பார்த்திருக்க தேவாலய மணி திருட்டு

லண்டன், ஜூலை 1

வெளியில் சத்தம் கேட்கவே, ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்த கார்கிரேவ் விக்கார் ஜெனரல் வண. கே. எச். குக் அதிர்ச்சியுற்றார். அங்கே தேவாலய மணியை சிலர் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர்.

"நான் பொலீஸாருக்கு அறிவித்து, உடுப்பு மாற்றி வருவதற்குள் தேவாலய மணியை லொறியில் ஏற்றிச் சென்று விட்டனர். தேவாலய வளவில் வைக்கப்பட்டிருந்த இந்த மணிகளின் பெறுமதி 2000 பவுனாகும். அதில் ஒன்று 1521-ல் சென். அன்ட்ரூஸ் கோட்டையில் நிறுவப்பட்டிருந்ததாகும்.

"ஒரு பெண்மணி எவ்வளவோ ஆசையுடன் இந்த மணிகளை வாங்கித் தந்தாள். களவு பற்றிக் கேள்விப்பட்டால் கவலைப்படுவாள். இதுபோன்று பல களவுகள் இங்கு நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன" என்று வண. குக் கவலை தெரிவித்தார். (ம-15)

## செவ்வாயில் மரம் உண்டு

சூரிய மண்டலக் கிரகங்களில் பூமிக்கு அடுத்தபடியாகச் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் இருக்கலாம் என்று கே. லியுபார்ஸ்கி என்ற சோவியத் விஞ்ஞானி கருதுகிறார்.

இந்த அநுமானம் உண்மை என்பதை உயிரியலாளர்களும், வானியல் ஆராய்ச்சிகளும், இதர விஞ்ஞான விவரங்களும் சுட்டிக் காட்டுகின்றன.

செவ்வாய்க் கிரகத்தில் பிராணவாயு இருக்கிறது என்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே, செவ்வாயில் உயிரினங்கள் இருப்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும் என்று லியுபார்ஸ்கி கருதுகிறார். செவ்வாயில் மெல்லிய, அகன்ற இலைகளைக் கொண்ட தாவரங்கள் உள்ளன என்று அவர் கூறுகிறார்.


# ஜீவன்டோன்.



எவ்வளவு நல்ல உணவு சாப்பிட்ட போதிலும், பலமின்றி சதை பிடியாமல் எலும்பும் தோலுமாக இருப்பவர்களுக்கு நல்ல எடையையும் பருமனையும் அளிக்கிறது. பசியாதிருப்பவர்களுக்கு சுகமான ஜீரண சக்தியையும், உடல் அசதி, கை கால் ஒய்ச்சல், வலிமைக் குறைவு, தலை சுற்றல், இரத்தக் குறைவு அஜீர்ணம், வளர்ச்சி இல்லாமை, சோர்வு, சக்தியின்மை இளமை மாறி முதுமையுடன் காட்சியளித்தல், உணர்ச்சி இல்லாமை, அதிக இல்லற சுகம் — மது அருந்தல் மூலம் உடல் கெடுதல், உணவு பிடிக்காமை, மலச்சிக்கல், கெட்ட நடத்தையினால் உடல் மெலிதல் முதலியவைகளை நீக்கி சிரிய முறையில் தேகசுகத்தையும் புஷ்டியையும் உண்டாக்கித் தருகிறது.

"ஜீவன்டோன்" மாமிச கொழுப்புச் சக்தியினால் தான் புஷ்டியும், எடையும் கிடைக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். அது மிகத்தவறு. "ஜீவன்டோன்" சுத்தக் காய்கறிகளின் மூலம் கிடைக்கும் கொழுப்புச் சத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. எல்லா மதத்தினரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

சிவந்த மேனியைப்பெற இதனுடன் தக்காளிப்பழம் சாப்பிட வேண்டும். மாதர்கள் மாதவிடாய் காலங்களில் சாப்பிடக் கூடாது. மற்றும் விபரம் மருந்துடன் அனுப்பிவைக்கப்படும்.

**454 கிராம் விலை ரூ. 16-50 1000 கிராம் விலை 32/-**

வி. பி. பி.யில் வேண்டுவோர் ரூ. 5/- முன் பணம் அனுப்பவும்

**நவலட்சுமி புத்தகசாலை,**

136, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## காதலியுடன் ஓட திட்டம் போட்ட பின் தற்கொலை

"நாலு வருடங்களாகக் காலஞ்சென்றவருடன் காதல் கொண்டிருந்தேன். இருவரது பெற்றோரும் எமது திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கடைசியாக அவர் என்னைச் சந்தித்தபொழுது, தன்னுடன் ஓடிவர ஆயத்தமாகுமாறு கூறிச் சென்றார். நான் காத்திருந்தேன். ஆனால் அவர் இறந்துவிட்டார் என்ற அதிர்ச்சிதரும் செய்திதான் கிடைத்தது."

வத்தேகம, இஹலகனகமவைச் சேர்ந்த ரன்ஹோட்டி கெதர குணரத்ன (23 வயது) என்பவர் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். திரு. எவ். சி. பி. மாரபொன நடத்திய விசாரணையில் இறந்தவரின் காதலியான ஆர். ஜி. ரொசலின் (19 வயது) மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

"அண்ணன் லயனல் அடித்தவுடன், கவலையுற்ற என் காதலன், கிராமத்தை விட்டே ஓடி, திருமணம் செய்யவேண்டுமென்று கூறி விட்டுச் சென்றார். அடுத்த நாள் அவரின் வரவை எதிர்பார்த்த எனக்கு, அதிர்ச்சிதான் கிடைத்தது. அவரின் மரணத்தையிட்டு நான் எவரையும் சந்தேகிக்கவில்லை" என்று ரொசலின் அழுகைக்கு இடையே கூறினார்.

இறந்தவரின் தாயார் ஆர். ஜி. உக்கு அம்மா, ஆர். ஜி. லயனல், ஆர். ஜி. ஐரீன் ஆகியோர் சாட்சியம் அளித்தபின், தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ம- 15)

## சீட்டோ பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு

மணிலா, ஜூலை, 1

இங்கு ஆரம்பமாகும் சீட்டோ மகாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு தேவையான பாதுகாப்புகள் அளிப்பதில் பொலீஸார் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர்.

இப் பிரதிநிதிகளுக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம் நடைபெற இடமுண்டென பொலீஸார் நம்புவதாலேயே இவ்வாறு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ல)


## தினத்தந்தி



மக்கள் தினசரி

* அன்றாட செய்திகள்!
* கருத்தான கார்ட்டூன்!
* விறுவிறுப்பான படக்கதை!
* சினிமா செய்திகள்!
* கேள்வி பதில்கள்!

பிரதி தினமும் பல புதுமையான செய்திகளைத் தரும் தினசரி

"தினத்தந்தி"

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ: 114-75 |
| 6 மாத சந்தா | ரூ. 57-40 |
| 3 மாத சந்தா | ரூ. 28-70 |

வெஸ்டன்

தபால் பெட்டி 960,

கொழும்பு.


## ஆத்திரமுற்ற வாலிபன் தன்னைத் தானே குத்தினான்

யாழ்ப்பாணம், ஜூலை. 1

வீட்டில் ஏற்பட்ட தகராறினால் மனமுடைந்த வாலிபர் ஒருவர் தனக்குத் தானே கத்தியால் குத்தினார்.

இச் சம்பவம் ஏழாலையில் நடைபெற்றுள்ளது. ஏழாலையைச் சேர்ந்த வி. விக்னேஸ்வரன் என்பவர் தனது தாயார் ஏசியதால் தன்னைத் தானே கத்தியால் குத்தினாராம்.

இவர் தற்பொழுது யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலீஸார் விசாரணை நடாத்துகிறார்கள். (ம- 220)

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 2 ஜூலை 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org